

மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் திட்டப்பகுதி கருணை தொகைக்கான காசோலையை பயனாளிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையர் பிரவீன்குமார் ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூரில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கலை, இலக்கியப் பேரவை சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் சண்முகநாதன் ஆகியோர் உள்ளனர்.

### முன்னாள் அமைச்சர் வே.தங்கப்பாண்டியன் 26 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

# இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் புகழஞ்சலி!

### மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிவிப்பு!

இராமநாதபுரம், ஜூலை 30-

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-



விருதுநகர் மாவட்டக் கழக செயலாளராகவும், ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தின் கழக வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியவரும். முன்னாள் அமைச்சருமானவே.தங்கப் பாண்டியன் அவர்களின் நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டு தோறும் மாவட்டக் கழகம் சார்பில் நேரில் சென்று புகழ் அஞ்சலி செலுத்துவது வழக்கம், அதே போன்று இந்த ஆண்டும் இன்று ( 31.07.2023 - திங்கட்கிழமை) காலை 9. மணி அளவில் விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணாறு கிராமத்தில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் நேரில் சென்று அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தா.இளைய அருணா தலைமை! வடசென்னை தமிழ்ச்சங்கம் சார்பில் - முத்தமிழறிஞர்

# கலைஞர் நூற்றாண்டு பட்டிமன்றம்! டாக்டர் ஜெய.ராஜமூர்த்தி துவக்கி வைத்தார்!

### நாஞ்சில் சம்பத் நடுவராகப் பங்கேற்றார்! எ.த.இளங்கோ வரவேற்புரை!

சென்னை, ஜூலை 31-

வடசென்னை தமிழ்ச் சங்கம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புடன் கொண்டாடப் பட்டு வருகிறது.

தமிழ்ச் சமூகத்துக்காக தன்னார்வத்தோடு உழைத்து வரும் பெருமக்களுக்கு வடசென்னை தமிழ்ச் சங்கத்தின் 'முத்தமிழறிஞர் கலைஞர் விருது' தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 11 பேர் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக 29.07.2023 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை, வியாசர்பாடி, மகாகவி பாரதி நகர், குரு சந்திரா மாளிகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பட்டிமன்றத்தை வடசென்னை தமிழ்ச் சங்கம் நடத்தியது.

சென்னை வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சென்னை மாநகராட்சி நகரமைப்புக்குழு தலைவர் தா.இளைய அருணா பட்டிமன்ற தொடக்க விழா நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

கழக அயலக அணி தலைவர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, கழக தணிக்கைக்குழு உறுப்பினர், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் நா. ரங்கபாஷ்யம், தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் குறிஞ்சி பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடசென்னை தமிழ்ச் சங்கத் தலைவர் எ.த. இளங்கோ வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசின் ஈ. எஸ்.ஐ.., மருத்துவமனைகள் இயக்குநர், நற்றமிழ் நாயகர் டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி அவர்கள், பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கியதோடு, சாதனையாளர் மு.இட்லி இனியவன் மற்றும் எழுத்தாளர் லதா சரவணன் ஆகியோருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் விருதுகள் வழங்கினார்.

இனிய தலைவர் கலைஞரை திரும்பத் திரும்ப பேச வேண்டிய காரணம் இனத்தின் மீட்சிக்காகவா? மொழியின் மாட்சிக்காகவா? என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்துக்கு திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் நடுவராகப் பொறுப்பேற்று சிறப்பித்தார்.

இனத்தின் மீட்சிக்காகவே என்ற அணியில் தலைமைக் கழக பேச்சாளர் குமரி பிரபாகரன், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் சே. மெ.மதிவதனி, திராவிடர் கழக மாநில மகளிர் பாசறை செயலாளர் பா. மணியம்மை ஆகியோர் பேசினர்.

மொழியின் மாட்சிக்காகவே என்ற அணியில் கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, ஊடகவியலாளர் சிவ நந்தினி, தலைமைக் கழகப் பேச்சாளர் சிவ ஆனந்த் ஆகியோர் பேசினர்.

வடசென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஜெ.டில்லிபாபு, வடசென்னை கிழக்கு மாவட்ட ம.தி. மு.க. செயலாளர் சு.ஜீவன், வடசென்னை மேற்கு மாவட்ட வி.சி.க. செயலாளர் நா.உஷாராணி, சென்னை வடக்கு மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கமுதி ப.சம்சுதீன், வடசென்னை மேற்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி தலைவர் குணங்குடி முகைதீன், வடசென்னை மாவட்ட கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க செயலாளர் ஞா.டேனியல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர்.

கழக தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் இரா.நரேந்திரன், பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன், பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன், தலைமை பொதுக் குழு உறுப்பினர் த.கமலக் கண்ணன், சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் சர்பஜெயா தாஸ் நரேந்திரன், 36ஆவது வட்ட செயலாளர் ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, 36ஆவது அ வட்ட செயலாளர் க.பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகளும்,

வடசென்னை தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வழக்கறிஞர் கு.பிரித்திவிராஜ், பொருளாளர் நா.கருணாநிதி, துணைத் தலைவர் சூ.லாரன்ஸ், ஆலோசகர் வழக்கறிஞர் ஏவள் ரவி, துணைச் செயலாளர்கள் இ.ரேகா, இரா.ரமாபாய், செயற்குழு உறுப்பினர் அ.பெ.ஆசைமுகம் உள்ளிட்ட தமிழ்ச் சங்க நிர்வாகிகளும் திரளான பொது மக்களும் பங்கேற்றனர்.

அனைவருக்கும் வடசென்னை தமிழ்ச் சங்கத்தின் ஆலோசகர் ப.மனோகரன் நன்றி கூறினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா வி. கிருஷ்ணன்
## ஜூலை 31 (2011)



இராயபுரம் 'ராபின்சன்' பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.

இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் 'துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### நாளுக்கு நாள் அதிகரிக்கும் 'இந்தியா' மீதான வெறுப்பு!

# அரசியலமைப்புச் சட்டத்திலிருந்தே 'இந்தியா' என்ற பெயரை நீக்க வேண்டுமாம்!

### நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. எம்.பி. பேச்சு!

புதுடெல்லி, ஜூலை 31-

2024 மக்களவைத் தேர்தலில், நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியை அகற்றுவதற்கு, 'இந்திய தேசிய வளர்ச்சியை உள்ளடக்கிய கூட்டணி' (Indian National Developmental Inclusive Alliance-I-N-D-I-A) என்ற புதிய கூட்டணியை எதிர்க் கட்சிகள் உருவாக்கியுள்ளன. இதில், காங்கிரஸ், இடதுசாரிகள், தி.மு.க., திரிணாமுல், ராஷ்ட்ரிய ஜனதாதளம், சமாஜ்வாதி, தேசியவாத காங்கிரஸ், சிவசேனா, ஐக்கிய ஜனதாதளம் என மொத்தம் 26 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதுவரை எதிரும் புதிருமாக இருந்த இந்த கட்சிகள் ஒன்றிணையும் பட்சத்தில், அது 2024 தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பலத்த அடியாக இருக்கும் என்று அரசியல் வல்லுநர்கள் கூறு கின்றனர். இது பா.ஜ.க.வுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் பதிலளிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள குரலெழுப்பும் போதெல்லாம், பா.ஜ.க. வினர் மோடி.. மோடி.. மோடி என கூறினால், எதிர்க்கட்சியினரோ தங்களின் கூட்டணி பெயரான 'இந்தியா' என்ற பெயரை குறிப்பிடும் விதமாக.. இந்தியா... இந்தியா.. இந்தியா.. என்று முழங்கு வதும் நடக்கிறது. இது பா.ஜ.க.வினரின் ஆத்திரத்தை அதிகப்படுத்தி வருகிறது. இந்நிலையில், எதிர்க்கட்சிகள் மீதான ஆத்திரம், அவர்கள் கூட்டணிக்குச் சூட்டியுள்ள 'இந்தியா' (INDIA) என்ற பெயருக்கு எதிராக திரும்பியுள்ளது. இதனால், எதிர்க் கட்சிகள் 'இந்தியா' என தங்களின் கூட்டணிக்கு பெயர் சூட்டிய உடனேயே, அசாம் பா.ஜ.க. முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, தனது டுவிட்டர் பயோவில் 'இந்தியா' என்ற பெயரையே நீக்கி, 'பாரத்' என்று மாற்றினார். அப்படியானால், மோடி அறிவித்த 'ஸ்டார்ட் அப் இந்தியா', 'ஸ்கில் இந்தியா', 'டிஜிட்டல் இந்தியா'வை எல்லாம் என்ன செய்வது? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பிய நிலையில், "அரசியலமைப்பால் ஏற்கப்பட்ட பெயரான இந்தியா, காலனித்துவ மரபில் இருந்து கடன் வாங்கப்பட்டது. இந்தியாவுக்கும் பாரதத்துக்கும் இடையிலான நாகரீக மோதல் பெயர்களை தாண்டி ஆழமானது. பாரதம் வெல்ல வேண்டும். பாரதம் வெல்லும்" எனவும் சர்மா சமாளித்தார். கூட்டணிக்கு 'இந்தியா' என்று பெயரிடப்பட்டதற்கு எதிராக, அவினிஷ் மிஸ்ரா என்பவர் தில்லி பார காம்பா காவல் நிலையத்தில் 24 எதிர்க்கட்சிகள் மீது புகாரளித்தார். பா.ஜ.க.வின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடியும்,

"இந்தியன் முஜாஹிதீன் அமைப்பும் இந்தியா என்ற பெயரை பயன்படுத்தியது. கிழக்கு இந்திய கம்பெனியும் இந்தியா என்ற பெயரை பயன்படுத்தியது" என்று பேசி, 'இந்தியா' என்ற பெயரையே ஒரு பயங்கரவாதச் சொல் என்பது போல கூறி, பரபரப்பை ஏற்படுத்தினார். இந்நிலையில்தான், பா.ஜ.க. மாநிலங்களவை உறுப்பினரான நரேஷ் பன்சால் நாடாளுமன்றத்தில் பேசுகையில், "பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியாளர்களால் வைக்கப்பட்ட பெயர் இந்தியா. நமது நாட்டின் உண்மையான பழமையான பெயர் பாரத் என்பதுதான். சமஸ்கிருத பெயரான பாரத் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்த பெயராகும். நமது நாடு வரலாற்று சிறப்பு மிக்க தனித்துவத்தை பெற்று உள்ளது. எனவே, காலனி யாதிக்க பெயரை தடை செய்ய வேண்டும். பாரத் என்ற பெயரை இந்தியா என பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மாற்றினார்கள். இந்தியா என்ற பெயர் அடிமைத்தனத்தின் குறியீடாக உள்ளது. அரசியலமைப்பில் இருந்தே அதை நீக்கம் செய்ய வேண்டும்" என அவர் பங்கிற்கு கொந்தளித்துள்ளார். "இந்தியா 75 வது சுதந்திர தினத்தை கொண்டாடும் தற்போதைய அமிர்த காலத்தில், அரசியல மைப்பின் முதலாவது ஆர்டிக்கிளில் நாட்டின் பெயரை பாரத் என்று மாற்றி, இந்தியா என்ற பெயரை நீக்கம் செய்ய வேண்டும். பாரத் என்று பெயர் மாற்றம் செய்வது, நாட்டின் பாரம்பரியத்தை மதிப்பதுடன், காலனியாதிக்க அடையாளத்தை நீக்கும் முதல் படியாகும்." என்றும் ஆவேசப் பட்டுள்ளார்.


